


மூத்த தமிழறிஞர் – திராவிட இயக்கச் சிந்தனையாளர் (நினைவில் வாழும்) முனைவர் மா. நன்னன் அவர்களின் துணைவியார் திருமதி பார்வதி அம்மையார் அவர்கள் நேற்று முன்தினம் இயற்கை எய்தினார். தகவல் அறிந்து கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள், சைதை – சின்னமலை பகுதியில் உள்ள நன்னன் அவர்களின் இல்லம் சென்று, பார்வதி அம்மையார் அவர்களின் திருவுடலுக்கு மலர் மாலை வைத்து அஞ்சலி செலுத்தி குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறினார். முன்னாள் அமைச்சர்கள் எ.வ. வேலு, மா. சுப்பிரமணியன், துணை மேயர் மு. மகேஷ் குமார் உள்ளிட்டோர் உடன் உள்ளார்கள்.



திருவிடைமருதூர் சட்டமன்ற தொகுதி, திருப்பனந்தாள், மட்டியூர் கிராமத்தில் சரவணன் என்பவரது வீடு மின் கசிவு காரணமாக தீப்பற்றி எரிந்த கூரை வீட்டினை நேரில் பார்வையிட்ட கோவி.செழியன் எம்.எல்.ஏ பாதிப்படைந்த குடும்பத்தினரை நேரில் சந்தித்து உணவு பொருட்கள், உடை, போர்வை மற்றும் நிதி உதவி வழங்கி ஆறுதல் தெரிவித்தார். அப்போது திருப்பனந்தாள் மேற்கு ஒன்றிய செயலாளர் அண்ணாதுரை, பேரூராட்சி தலைவர் வனிதா ஸ்டாலின், கிராம நிர்வாக அலுவலர் மற்றும் அரசு அதிகாரிகள் உள்ளிட்ட பலர் உடன் இருந்தனர்.

### பெரியார் உலகமயமாகிறார்; உலகம் பெரியார் மயமாகிறது!

# ஜப்பான் தலைநகர் டோக்கியோவில், அக். 11, 12 இரு நாட்கள் மாநாடு!

## திராவிடர் கழகத் தலைவர் ஆசிரியர் கி.வீரமணி அறிக்கை

*சென்னை, ஜுன் 7-*

பெரியார் உலகமயமாகிறார்; உலகம் பெரியார் மயமாகிறது! பெரியார் பன்னாட்டமைப்பும், ஜப்பான் தோழர்களும் இணைந்து ஜப்பான் தலைநகர் டோக்கியோவில், 2026, அக்டோபர் 11, 12 ஆகிய நாள்களில் இரு நாள் மாநாடு நடைபெறவிருக்கிறது. தந்தை பெரியாரின் ‘மண்டைச் சுரப்பை’ உலகு தொழுகிறது என்று திராவிடர் கழகத் தலைவர் ஆசிரியர் கி.வீரமணி அவர்கள் அறிக்கை விடுத்துள்ளார்.

அவரது அறிக்கை வருமாறு:

திராவிடர் கழகம் - ஒரு கட்சி அல்ல; மாறாக அது ஓர் இயக்கம்.

‘கட்சி’ (Party) என்பதற்கும், இயக்கம் (Movement) என்பதற்கும் நிறைய வேறுபாடு உண்டு.

இலட்சியங்களை மய்யப்படுத்தி, அவற்றிற்காக - நிரந்தரமாக இயங்கிக் கொண்டே இருப்பது இயக்கம் (Movement).

ஆனால், கட்சி (Party) என்பது ஒரு நோக்கத்திற்காக செயல்பட்டு, அதன் நோக்கம் நிறை வேறிய போதோ அல்லது வேறு பல காரணங்களாலோ, அதன் ஆயுளும், தேவையும் முடிந்துவிடுவதன் காரணமாக, அது இயங்க முடியாத அல்லது தேவையற்ற ஒன்றாக ஆகிவிடும்.



### காந்தியாரின் அறிவுரையைப் புறக்கணித்த காங்கிரஸ்!

எடுத்துக்காட்டாக, காங்கிரஸ் கட்சி, ‘சுயராஜ்யம்’, ‘சுதந்திரம்’ பெற்றது 1947 ஆகஸ்ட் 15 இல் என்பதையொட்டி, அண்ணல் காந்தியார் அவர்கள், “காங்கிரஸ் கட்சி கலைக்கப்பட வேண்டும்; அது மேலும் நீடித்தால் அதற்குப் பல வித விரும்பத்தகாத நிலைகள்தான் ஏற்படும்” என்று எச்சரித்தார்; அந்தக் காலகட்டத்தில், காந்தியாரின் அறிவுரை - அரசியல் லாபங்கள், பதவிகளைச் சுவைக்கத் துடித்த காங்கிரஸ் கட்சி, அதற்கு மாறுபட்ட நிலையை எடுத்தது!

காங்கிரஸ் கட்சியில் கடுமையாக உழைத்து, சமூகநீதியைப் பறிக்கும் ஆரிய ஆதிக்கத்திலிருந்து அது வெளியே வர முடியாத யதார்த்த நிலையை அனுபவித்து உணர்ந்த தந்தை பெரியார், சமூக நீதி செயற்பாடுகள் (வகுப்புரிமை) பல தோற்றதின் காரணமாக, காங்கிரசை எதிர்த்துத் தனி இயக்கம் கண்டார். (இன்று மீண்டும் ‘ஆரிய மாயை’யில் காங்கிரஸ் சிக்கியுள்ளது!)

உலகளாவிய இயக்கமாக மாறியிருக்கிறது!

1925 இல் அவர் “சுயமரியாதை இயக்கம்” கண்டார்! ‘கட்சி’ ஆரம்பிக்கவில்லை என்பது கூர்ந்து கவனிக்கப்பட வேண்டியதாகும்.

அவ்வியக்கத்திற்குத் தலைமை தாங்கி, தனது சொந்தப் பணத்தைச் செலவழித்து, ‘குடிஅரசு’, ‘பகுத்தறிவு’ போன்ற ஏடுகளைத் தொடங்கினார். பல நூற்றாண்டு ஜாதி, தீண்டாமை, மூடநம்பிக்கை, பெண்ணடிமை இவற்றை ஒழித்து, வகுப்புரிமை - சமூகநீதிக் களங்களத்தில் முதல் போராளியாக நின்று, வென்று தனது 95 ஆம் ஆண்டு முடியும் வரையில் தொடர்ந்து, அவ்வியக்கத்திற்காக அடிக்கட்டுமானம், கொள்கைச் சொத்து, பிரச்சாரக் களம் முதலியவற்றை நாளும் கண்டு, எதிர்நீச்சல் அடித்து, வெற்றி என்னும் கரையை அடைந்து, அவரது வாழ்நாளுக்குப் பிறகும், அவ்வியக்கமும், அதன் ஒப்பற்ற துணிவும், தெளிவும் மிக்கக் கொள்கைகளும், உண்மையான சுயநலமற்ற தொண்டர்களும், அதனை இன்று உலகளாவிய இயக்கமாக மாற்றி, தொய்வின்றி தொடர்ந்து நடத்தி, வாகை சூடி வைர நெஞ்சினராக உலா வருகின்றனர்!

“இன்று எனது இயக்கம் ஏதோ ஒரு சிறு கூட்டத்தினரை (பார்ப்பனர் ஆதிக்கம்) எதிர்த்து நடைபெறும் இயக்கமாகத் தொடங்கப்பட்டிருக்கிறது. வருங்காலத்தில், அது உலகளாவிய மானுட உரிமை இயக்கமாகும். அதன் கொள்கைகளும், லட்சியங்களும் உலகத்திற்குத் தேவைப்படும் ஓர் இயக்கமாக மாறும்” என்று முன்னோக்கோடு கணித்துக் கூறினார்.

அது முற்றான உண்மை என்பதை நிலைநாட்டும் வண்ணம், உலகின் பற்பல நாடுகளிலும் தந்தை பெரியாரின் பகுத்தறிவு மனிதநேய இயக்கம் பரந்து பட்ட மானிடப் பரப்பையே தனது எல்லையாகக் கருதி, அலுப்பு சலிப்பின்றி வளர்ந்து வருகிறது - ஊடகங்களின் கட்டுப்பாடான இருட்டடிப்பு - திரிபுவாதங்களையும் தாண்டி!

திராவிடத்தை அழிக்க - ஆயிரமாயிரம் அலப்பறைகளைச் செய்தாலும் மூக்குடைபடும் ஆரியம்!

ஆரியம் எளிதில் எவரையும் விலைக்கு வாங்கிடவோ, திரிபுவாத த்தின் மூலம் திசை திருப்பி விடுவதோ, விபீடணர்கள் - அடிவருடிகள் தன்னை விற்றுக் கொண்டு, மானத்தை, உரிமையை மறந்து, அறிவைத் துறந்து, துரோகத்தின் உருவங்களாகியும் கூட, மூல பீடமான தமிழ்நாட்டை, அதன் தளரா கொள்கைப்பாட்டை, “திராவிடத்தை” அழிக்க - ஆயிரமாயிரம் அலப்பறைகளைச் செய்தாலும், முடியாத சூழ்நிலை - அவ்வப்போது தங்களது படையெடுப்பு முறையை பலவித வியூகங்கள், உத்திகள் மூலம் மாற்றிக் கொண்டும், மூக்குடைபட்டுக் கொண்டும்தான் உள்ளன. மாற்று ‘அவதாரங்களுக்கு’ ஆயத்தமாகி வரும் நிலை!

### 35 ஆண்டுகளுக்கு முன்பு “பெரியார் பன்னாட்டு அமைப்பு!”

வட அமெரிக்காவில் கடந்த 35 ஆண்டுகளுக்கு முன்பு - சிகாகோ நகரில், ஒரு சில நண்பர்கள் குடும்பங்களை வைத்து, டாக்டர் சோம.இளங்கோவன், டாக்டர் சரோஜா இளங்கோவன் மற்றும் பல தோழர்களால் தொடங்கப்பட்ட “பெரியார் பன்னாட்டு அமைப்பு” என்ற மனிதநேய அமைப்பு ஆல் போல் தழைத்து, அருகு போல் வேரோடி, பற்பல நாடுகளில் அதன் வளர்ச்சியும், கொள்கை லட்சிய முழக்கமும், தேவையும் பரவியுள்ளன. (தண்ணீர் ஊற்றினாலும், ஊற்றாவிட்டாலும், வளர்ந்தோங்கி வரும் பனைமரம் போல, ஏழை, எளியவர்களை வாழ வைக்கும் ‘வாழ்வியல் வசந்த மரம்’ அது).

அவ்வமைப்பினால், கடந்த ஆண்டுகளில் ஜெர்மனி, அமெரிக்கா, கனடா, ஆஸ்திரேலியா போன்ற உலகின் பல்வேறு திக்குகளில், வெற்றிகரமாக மாநாடுகள் நடத்தி, மனிதநேய சுயமரியாதைக் கதிரொளியைப் பாய்ச்சியது. அங்குள்ள மக்களை பரவசமடையச் செய்தது!

### இரு நாள் மாநாடு!

அதன் வெற்றித் தொடர்ச்சியாக, 2026, அக்டோபர் 11, 12 ஆகிய நாள்களில், ஜப்பான் தலைநகர் டோக்கியோவில் இரு நாள் கருத்தரங்க மாநாட்டு ஏற்பாடுகளை ஜப்பான் தோழர்களும், பெரியார் பன்னாட்டமைப்பும் இணைந்து நடத்திட உற்சாகமுடன் பணியாற்றி வருகின்றனர்!

வழமைபோல், நம் நாட்டுத் தமிழினப் பேராளர்கள் (Delegates) அந்த இரு நாள் கருத்தரங்க மாநாட்டில் கலந்து கொள்ளவும், சிறு சுற்றுலாப் பயணம் முடித்து திரும்பும் வகையில் ஜப்பான் பயணத்திற்குத் திட்டமிடப்பட்டு வருகிறார்கள்!

குறிப்பிட்ட அளவே வெளிநாட்டுப் பிரதிநிதிகள் (Delegates) கலந்து கொள்ள வாய்ப்பு என்பதால், முந்திக் கொண்டு, கலந்துகொள்ள விருப்பம் உள்ளவர்கள், விரைந்து அடுத்த தகவலுக்காகக் காத்திருந்து, தந்தை பெரியாரின் ‘மண்டைச் சுரப்பை’ உலகு தொழும், சூரியன் நாட்டில் சுயமரியாதை முழக்கம் கேட்டு, மகிழ ஆயத்தமாவீர்களாக!

பெரியார் அனைவருக்கும் உரியார், மறவாதீர்!

பெரியார் உலகமயமாகிறார்; உலகம் பெரியார் மயமாகிறது!

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.





தஞ்சை வடக்கு மாவட்டம், கும்பகோணம் மாநகர தி.மு.க சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 103வது பிறந்தநாளை முன்னிட்டு கும்பகோணம் மாவட்டக் கழக அலுவலக வாயிலில் கழக இருவர்ண கொடியேற்றி, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செய்தனர். பின்னர் மாவட்டக் கழக பொறுப்பாளர் சாக்கோட்டை க.அன்பழகன், சு.கல்யாணசுந்தரம் எம்.பி, மாநகரச் செயலாளர் சு.ப.தமிழழகன் ஆகியோர் பள்ளி மாணவ மாணவியருக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினர். இதில் மாவட்ட, மாநகர, பகுதி, வட்டக் கழக செயலாளர்கள், நிர்வாகிகள், கழக முன்னோடிகள் உள்ளனர்.





முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 103 வது பிறந்த நாளை முன்னிட்டு தலைவாசல் மத்திய ஒன்றிய தி.மு.க. சார்பில் பொதுமக்களுக்கு இனிப்புகளை ஒன்றிய செயலாளர் சாத்தப்பாடி மணி வழங்கினார். இதில் முன்னாள் எம்.எல்.ஏ. குணசேகரன், செல்லையா, கண்ணுச்சாமி , மற்றும் ஒன்றிய நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### ஏரியூர் ஒன்றியம் பத்ர அள்ளி ஊராட்சி ஆரல்குந்தி அண்ணாநகர்,

# கிளைக்கழக துணை செயலாளர் வை.செல்வம் - பாப்பாத்தி புதிய இல்லம்!

## பி.என்.பி.இன்பசேகரன் திறந்து வைத்தார்!

*தருமபுரி, ஜுன் 7-*

தருமபுரி கிழக்கு மாவட்டம், பென்னாகரம் சட்டமன்றத் தொகுதி, ஏரியூர் ஒன்றியம், பத்ர அள்ளி ஊராட்சி ஆரல்குந்தி அண்ணாநகர், கிளைக்கழக துணைச் செயலாளர் வை. செல்வம் - பாப்பாத்தி, ஆரல்குந்தி கிளைக்கழக இளைஞரணி செ. மணிகண்டன், செ. குமார், சந்தியா ஆகியோரின் புதிய இல்லத்தினை தருமபுரி மாவட்டக் கழக முன்னாள் செயலாளரும், பென்னாகரம் முன்னாள் சட்டமன்ற உறுப்பினருமான, கழக மாநில விவசாய தொழிலாளர் அணி துணைத் தலைவர், பி.என்.பி. இன்பசேகரன் ரிப்பன் வெட்டி புதிய இல்லத்தினை திறந்து வைத்தார்.



இதில் தருமபுரி மாவட்ட மீனவரணி துணை செயலாளர் மாவட்டக் கழக பிரதிநிதி, ஆரல்குந்தி ஆசி. தனபாலன் அனைவரையும் அன்புடன் வரவேற்றார். உடன், பென்னாகரம் கழக செயலாளர் என். செல்வராஜ், தருமபுரி மாவட்ட மருத்துவரணி லோட்டஸ் பள்ளி தாளாளர் மருத்துவர், பி.என்.பி. ராஜசேகரன், பி.என்.பி. ஜானகி அம்மாள், தருமபுரி மாவட்ட வர்த்தகர் அணி அமைப்பாளர் பி.கே. துரைசாமி, மாவட்ட இளைஞரணி து.அ. த. கார்த்திக், மாவட்ட விவசாய அணி அமைப்பாளர் ஆர்.சன் ராஜேஷ், பென்னாகரம் முன்னாள் ஒன்றிய கழகச் செயலாளர் மடம் க. முருகேசன், பிரதீப் துணைச் செயலாளர் முனியப்பன், பெ. செட்டி, மணி, மதியழகன், சி. சிவக்குமார், ப.சீராளன், ப. காந்தி, ச. அய்யந்துரை, கொ. ரவிச்சந்திரன், செல்வி, முன்னாள் வார்டு உறுப்பினர்கள், ஏ. கே. பாலகிருஷ்ணன், பே. சண்முகம், செல்வி, அப்பாதுரை, செல்வாம்மாள், கிளைக் கழகச் செயலாளர்கள், ப. மந்திரி, சேவி, பெ. செலம்பன், கோ. சிவக்குமார், மதனகேசவன் ஆசி. மாதேஸ், பாக முகவர்கள், அ. தினேஷ்குமார், சி. வெள்ளையன் - வனிதா, உத்திரகுமார் உள்ளிட்ட திரளான நிர்வாகிகள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.



திருவாரூர் காட்டூரில் அமைந்துள்ள புகழ்பெற்ற கலைஞர் கோட்டத்தில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 103 வது பிறந்தநாள் விழா மாவட்டக் கழகச் செயலாளர் பூண்டி கே.கலைவாணன் எம்.எல்.ஏ. தலைமையில் சிறப்பாக நடைபெற்று ஏழை எளிய மக்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டது. ஒன்றிய செயலாளர்கள் ஆர். பாலச்சந்திரன், சேகர் கலியபெருமாள், நகரக் கழக செயலாளர் வாரை.எஸ்.பிரகாஷ் மற்றும் கழக நிர்வாகிகள் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.



முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 103 வது பிறந்த நாளை முன்னிட்டு சேலம் கிழக்கு மாவட்டம் நரசிங்கபுரம் நகர தி.மு.க. சார்பில் கேக் வெட்டி பொதுமக்களுக்கு நகர செயலாளர் என்.பி.வேல்முருகன் வழங்கினார்.இந்நிகழ்ச்சியில் நகர மன்ற தலைவர் அலெக்சாண்டர் நகர மன்ற உறுப்பினர்கள் பிரகாஷ், சின்ன பையன், செல்வம், பரமசிவம், ரமேஷ், ராமசாமி, இளவரசு, ஞானம், அசோக், கண்ணன், செந்தில், வெங்கடேஷ், தியாகு, சாந்தி, கமலக்கண்ணன், விஜயகுமார், கருணாநிதி, சக்தி, பாண்டியன், புலித்தேவன், மற்றும் தி.மு.க. நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.